செய்தி வெளியீடு எண் : 2356 நாள் : 27.11.2023

**செய்தி வெளியீடு**

சீர்மரபினர் வகுப்பினரின் சமூக, பொருளாதார மற்றும் கல்வி மேம்பாட்டிற்காக "சீர்மரபினர் நல வாரியம்", 2007 ஆம் ஆண்டில் அரசால் அமைக்கப்பட்டது. இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு, தொழிலாளர் நலன் – திறன் மேம்பாட்டுத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் நல வாரியங்கள் மூலம் வழங்கப்பட்டு வரும் நல உதவித் திட்டங்கள் போன்று விபத்து நிவாரணம், கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை மற்றும் முதியோர் ஓய்வூதியம் ஆகிய உதவிகள் வழங்கப்படுகின்றன.

தற்போது, சீர்மரபினர் நல வாரியம், அரசாணை (நிலை) எண்.83, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள்:24.11.2023–இல் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்களை தலைவராகவும், திரு. இராசா. அருண்மொழி அவர்களை துணைத் தலைவராகவும், திரு. கே.எஸ். ராஜ்கவுண்டர், திரு.சேகர், திரு. பசுவை சக்திவேல், திரு. முனுசாமி, திரு. S. கணேசன், திரு. கே.எஸ். கண்ணன், திரு. கதிர்வேல், திரு. பண்ணைப்பட்டி கோவிந்தராஜ், திரு. ப. சந்திரன், திரு. சூர்யா பி.தங்கராஜா, திரு. பெரி. துரைராசு, திருமதி. பாண்டீஸ்வரி மற்றும் திரு. பெரியசாமி ஆகிய 13 அரசு சாரா உறுப்பினர்களை நியமனம் செய்து 3 ஆண்டு காலத்திற்கு திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

**அரசு செயலாளர்,**
**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர்**
**மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை.**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in